1971 ஜூன் 29]

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, சிறையில் அரசாங்கத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் தண்டனை காலம் முடிவதற்குள்ளாக சிறையிலிருந்து வெளியே அனுப்பப்படு வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தேர்ச்சியிலே வெற்றி பெற்றதாலே, விடுதலை கொடுக்கலாம் என்பதற்குச் சட்டம் இடம் கொடுக்காது.

ஆயுள் கைதிகளின் தண்டனைக் காலவரம்பு.

* 83. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா.

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனைக் கால வரம்பை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆயுள் தண்டனைக் கால வரம்பு இத்தனை ஆண்டுக் காலம் என்று மாற்றியமைக்கப் படுமா? திறந்த வெளி சிறைச்சாலையில் வைத்து நன்னடத்தை பார்க்க வசதி செய்து, காலவரம்பு குறைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் முழுவதும் இருக்கவேண்டியது தான். ரெமிஷன் பர்ப்ஸ்சுக்காக கணக்கிடும்போது 20 ஆண்டுகாலம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 3-ல் 2 பங்கு ஆயுள் தண்டனை அனுபவித்து அதற்கென்று ஒரு அட்வைசரி கமிட்டி வைத்து, அந்தக் கமிட்டி அதைப் பரிசீலித்து, அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யும். அந்தப் பரிந்துரைகளை வைத்து 'ப்ரீமெச்சூர்' ரிலீஸ் கொடுக்க அரசு உத்தரவிடும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, ஆயுள் கைதிகள் என்றால், ஆயுள் பூராவும் இருக்க வேண்டுமென்று நான் நினைக்க வில்லை. சாதாரணமாக 10 ஆண்டுகளுக்கு மேலே அவர்கள் விடுதலை செய்வதற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. இன்று பல சிறைச்சாலைகள் 15-17 ஆண்டுகள் சிறையில் கைதிகள் இருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆயுள் தண்டனைக் காலம் 10 ஆண்டு காலம் என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை. ஆயுள் தண்டனை என்றால் ஆயுள் தண்டனைதான். விடுதலை செய்வதற்கு விதிகளில் இடம் செய்திருக்கிறோம். அந்த விதிகளின்படி 20 ஆண்டுகள் ஆயுள் தண்டனை காலம் என்று

கணக்கிட்டுக் கொண்டு அதிலே 3-ல் 2 பங்கு தண்டனை அனுபவித்து விட்டால் 'ப்ரி-மெசூர்' ரிலீஸ், முன்கூட்டியே விடுதலை செய்வதற்கு அரசாங்கம் உத்தரவிடுகிறது. 15 ஆண்டுகளுக்கு மேல் சிறைச் சாலையில் இருந்தால் அவர்களை உடனடியாக அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தூக்கு தண்டனை கொடுக்கக் கூடாது என்ற எண்ணம் பரவி வருகிறதே அதன்படி தூக்குத் தண்டனையை தமிழக அரசு ரத்து செய்ய பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, 'ப்ரி-மெசூர்' ரிலீஸ் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஆலோசனைக் குழு பரிந்துரை செய்வதற்கு ஏதாவது அடிப்படை (கிரைடீரியன்) நிர்ணயிக்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 3-ல் இரண்டு பங்கு இருந்து விட்டால், உடனே அது ஆலோசனைக் குழுவிற்கு செல்கிறது. அந்த ஆலோசனைக் குழு அந்த கைதிகள் வாங்கி இருக்கும் மார்க்குகள் என்ன, அவர்களுக்கு ரெமிஷன் எவ்வளவு கொடுக்கலாம் என்று கணக்கிட்டு, பரிசிலனை செய்து பரிந்துரை செய்கிறது. அரசாங்கம் அந்த பரிந்துரைகளின் மீது முடிவு எடுக்கிறது.

மு.ப. 10-00 **திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, கடும் குற்றம் புரிந்த நீண்டகாலக் கைதிகளையும் சிறு சிறு குற்றங்கள் புரிந்து விட்டு, குறைந்த கால தண்டனை பெற்றவர்களையும் ஒன்றாகச் சேர்த்து வைக்காமல் அவர்களைத் தனித்தனியாக வைக்க ஏற்பாடு செய்யப் படுமா? அதற்கான பரிசிலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே அடிக்கடி குற்றம் செய்பவர்கள் (Habitual offenders) மட்டுந்தான் தனியாக வைக்கப்படுகிறார்கள். ஒரு சிறைச்சாலையில் இருக்கிற குற்றவாளி களைத் தனித்தனியாக வைக்க வாய்ப்புக்கள் இருக்கின்றன. திறந்த வெளி சிறைச்சாலையிலும் தண்டனை பெற்றவர்களை எப்படி எப்படி பிரித்து வைக்கலாம் என்பதும் யோசிக்கப்படும். கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் ஆயுள்தண்டனை போன்ற தண்டனை அடைந்தவர்கள் கெட்டவர்கள் என்றோ குறைந்தகாலத் தண்டனை பெற்றவர்கள் கெட்டவர்கள் அல்ல என்றோ முடிவு செய்ய முடியாது.

1971 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது கேள்வி நேரம் முடிகிறது. அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

Tourism Development Corporation

* 84 *Q.* Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. The Minister for Backward Classes be pleased to state:

(*a*) whether any Tourism Corporation has to be set up in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கென இணைச் செயலாளர் தரத்தில் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கழக அமைப்புபற்றிய விபரங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. விரைவில் இக்கழகம் பதிவு செய்யப்படும்.

Thiru K. M. SUBRAMANIAM: Will the Hon. Minister clarify whether the middle and low-income group tourism will be encouraged in this State and if so what arrangements he is proposing to make for this type of tourism apart from foreign tourism? That is point No. 1. Is the Hon. Minister also aware that several crores of rupees are being spent by luxury hotels, under the excuse of tourism, with the result many of the priority claims of people, poor people, in respect of housing, are lost?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பற்றியது. இதில் கனம் அங்கத்தினர் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு சுற்றுலாவிற்கு என்னென்ன ஏற்பாடுகள் என்று கேட்கிறார்கள். அதையெல்லாம் கவனிக்கத்தான் இந்த சுற்றுலாக் கழகம் அமைக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் குறைந்த செலவில் தங்குவதற்கான விடுதிகளை அமைக்கவும், சுற்றுலா பயணிகள் நல்ல வகையில் தங்குவதற்கான அளவில் விடுதிகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உல்லாசப் பயணிகளை ஈர்க்க உதகையில் 'ரோப் வே' ஒன்றை அமைக்கத் திட்டமுண்டா? ஆம் எனில், அதற்கான வேலைகள் எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: திட்டம் இருக்கிறது. வேலைகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.